**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**

**முன்னிலை - திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2025ம் ஆண்டு ஏப்ரல் 24ம் நாள் வியாழக்கிழமை**

**இடைக்கால மனு எண்.9/2025**

**இன்**

**அசல் வழக்கு எண். 84/2012**

வெங்கடேஸ்வரன் ...... மனுதாரர்/ வாதி

**/ எதிர் /**

1.ராமையா

2.பாலசுப்பிரமணியன்

3.சங்கரநாராயணன்

4.இந்துமதி

5.சுரேஷ்

6.அசோக் ...... எதிர்மனுதாரர்கள்/1, 3 முதல் 7 பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 08.04.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. மனுதாரர் தரப்பில் Order 26, Rule 10(A) & 10(B) மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி கையெழுத்து நிபுணரின் கருத்துரை பெறுவதற்காக வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா சொத்து ஆரம்பத்தில் 10.09.1968ம் தேதியிட்ட கிரைய பத்திரப்படி நாராயண பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டு, அவர் 10.03.1970ம் தேதிய கிரைய பத்திரத்தின் மூலம் பற்குணன் என்பவருக்கு கிரையம் கொடுத்து, பின்னர் அவர் 28.06.1974ம் தேதிய கிரைய பத்திரம் மூலம் சிவபாக்கியம் என்பவருக்கு கிரையம் கொடுத்து, பின்பு சிவபாக்கியம் 13.06.1978ம் தேதியில் மோகனாம்பாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும்,

மேற்படி அடிப்பத்திரங்கள் அனைத்தின் அசல்களை சிவபாக்கியம், மோகனாம்பாளிடம் ஒப்படைத்துள்ளார் என்றும், பின்னர் மோகனாம்பாள் 31.05.2011ம் தேதியிட்ட கிரையம் பத்திரம் மூலம் மனுதாரருக்குக்கு கிரையம் கொடுத்து அதுமுதல் அனுபவத்தில் இருந்து வருவதாகவும், இந்நிலையில் தாவா சொத்தினை 19.01.1977ம் தேதியிட்ட பத்திரத்தின் மூலம் சிவபாக்கியம் என்பவர் சௌந்தரம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்து சௌந்தரம்மாளிடமிருந்து 14.12.1990ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் 1 முதல் 4 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளதாக சொல்லி மனுதாரரின் அனுபவத்தில் இடைஞ்சல் செய்ய முயற்சி செய்ததால் மனுதாரர் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், 19.01.1977ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் உண்மையான பத்திரம் இல்லை என்றும், அது ஆள்மாறாட்டம் செய்யப்பட்டு போலி கையொப்பமிட்டு உற்பத்தி செய்யப்பட்ட பத்திரம் என்றும் மேற்படி பத்திரம் உண்மையான பத்திரமா? இல்லையா என்பதற்கு அந்த பத்திரத்தில் சிவபாக்கியம் வைத்தாக சொல்லப்படும் கைரேகையையும், அதே சிவபாக்கியம் எழுதிக்கொடுத்த வேறு பத்திரங்களில் உள்ள சிவபாக்கியத்தின் ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகைகளையும் ஒப்பிட்டு பார்த்தால் தான் 19.01.1977ம் தேதிய பத்தித்தின் உண்மைநிலை தெரியவரும் என்றும், எனவே சம்பந்தப்பட்ட பத்திர அலுவலகத்திலிருந்து மனுவில் கண்டுள்ள ஆவணங்களின் அசல் பதிவேடுகளை பெற்றும், பிரச்சனைக்குரிய 19.01.1977ம் தேதியிட்ட பத்திரத்திற்கான அலுவலக பதிவேட்டில் உள்ள கைரேகைகளையும் ஒப்பிட்டு பார்த்து கையெழுத்து நிபுணரின் கருத்துரை பெறுவதற்காக சென்னையில் உள்ள கையெழுத்து நிபுணர் அலுவலகத்திற்கு கொண்டு சென்று கைரேகை நிபுணர் அந்த ஆவணங்களை ஆய்வு செய்து தயார் செய்த அறிக்கையையும், அசல் ஆவணங்களையும் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்திரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரார் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் எதிர்மனுதாரர்களால் ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், மனுதாரர் குறிப்பிடும் மனுவில் கண்ட பரிகாரத்தை பொறுத்து ஏற்கனவே சமூகம் நீதிமன்றத்தில் இ.ம.எண்.22/2024 என்ற எண்ணில் தாக்கல் செய்து 07.08.2014ம் தேதி தள்ளுபடி ஆகிவிட்டது என்றும், அதன்பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் சீராய்வு மனு தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடியாகிவிட்டநிலையில் பொய்யான காரணங்களை கூறி கடந்த 2018ம் ஆண்டே வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டநிலையில் பல இடைநிலை மனுக்களை மனுதாரர் தொடர்ந்து தாக்கல் செய்து மனுதாரர் காலம்கடத்தி வருவதாகவும், மனுதாரர் வழக்கை நடத்தாமல் பொய்யான மனு தாக்கல் செய்து அதனடிப்படையில் இம்மனுவினை வயதான தங்களை அலைக்கழிவு

செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை என்றும் எதிருரை தாக்கல்.

4. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**5. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர் தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்களின் அசல் பதிவேடுகளை சம்பந்தப்பட்ட பத்திர அலுவலகத்திலிருந்து வரப்பெற்று கையெழுத்து நிபுணர் ஆய்வு செய்து அவரின் கருத்துரை பெறுவதற்காக நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரிய மனுவினை பரிசீலிக்கையில், மனுவில் கண்ட பரிகாரத்தை பொறுத்து மனுதாரர் ஏற்கனவே இடைநிலை மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடியாகியுள்ளநிலையில், அதன்பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் சீராய்வு மனு தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடியாகிவிட்டதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கான ஆவணங்கள் வேறாகவும், தற்போதுள்ள மனுவிற்கான ஆவணங்கள் வேறாக உள்ளதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும் இடைநிலை மனுவிற்கு முன்தீர்ப்பு தடை கோட்பாடு Resjudicata பொருந்தாது.

5.1. அதேபோல பிரச்சனைக்குரிய ஆவணத்துடன் மனுதாரர் சொல்லியுள்ள ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணத்தை ஒப்பீடு செய்து உண்மை நிலையை கண்டறிவது வழக்கை முடிவு செய்ய ஏதுவாக இருக்கும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்க தகுந்த நிலையில் உள்ளது.

5.2. மனுதாரார் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. இருதரப்பு வாதங்களை கேட்டு முடிவு செய்ய வேண்டும் என்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

5.3. எனவே வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி, M.A.,B.L, அவர்களை வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து மனுவில் கண்டுள்ள ஆவணங்களின் பதிவுகள் சம்பந்தப்பட்ட பத்திர அலுவலகத்திலிருந்து அசல் பதிவேடுகளை பெற்று கையெழுத்து நிபுணரின் கருத்துரை பெறுவதற்காக சென்னையில் உள்ள கையெழுத்து நிபுணர் அலுவலகத்திற்கு கொண்டு சென்று கைரேகை நிபுணர் அந்த ஆவணங்களை ஆய்வு செய்து தயார் செய்த அறிக்கையையும், அசல் ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

மேலும் மனுதாரர் வழக்கறிஞர் ஆணையாளர் கட்டணமாக ரூ.15,000/- இம்மனு உத்தரவு தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் வழக்கறிஞர் ஆணையர் வசம் வழங்கி அதற்குரிய ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக வழக்கறிஞர் திரு.M.துரைபாண்டி, M.A.,B.L, அவர்களை இந்த வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து, அவர் பத்திர அலுவலத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் பிரச்சனைக்குரிய 19.01.1977ம் தேதியிட்ட பத்திரத்திற்கான அலுவலக பதிவேட்டில் உள்ள** ஆவண **கைரேகையையும் ஒப்பீடு செய்வதற்காக சென்னையில் உள்ள தடயவியல் அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தும், ஆய்வுக்கு பின்னர் மேற்படி ஆவணங்களையும், நிபுணர் அறிக்கையையும் ஆய்வகத்திலிருந்து பெற்று இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டு இம்மனு செலவுதொகையின்றி அனுமதிக்கப்படுகிறது. அழைக்க:-09.06.2025.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, , அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஏப்ரல் 24ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.24 17:22:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மானாமதுரை.

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.24 17:22:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA 9/2025**

**in**

**OS 84/2012**

**Order**

**24.04.2025**